NEWS CLIPPING

| | | | |
|---|---|---|---|
| MEDIA | THINAKURAL | DATE | 23 OCT 2013 (WED) |
| PAGE / SECTION | 4 / PRIME NEWS | READERSHIP | 100,000 |


# தாதிமைத்துறைச் சேவையாளர்களுக்கு பிஜே ரோட்டரி கிளப் கௌரவிப்பு

**கனகா**

**சுபாங் ஜெயா, அக். 23–** அனைத்துலக தொழில்முறை சேவை (Vokasional) மாதத்தை முன்னிட்டு, தாதிமைத்துறையில் நீண்ட காலமாக சிறந்த சேவையை வழங்கியுள்ள 5 தாதிகளுக்கு, பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் நற்சான்றிதழை வழங்கி சிறப்பித்துள்ளது.

சுபாங் ஜெயா கிரேண்ட் டோர்செட் ஹோட்டலில் நடை பெற்ற இந்நிகழ்வில், பாராட்டுப் பெற்ற தாதிகளுக்கு ஒலிம்பஸ் கேமராக்களை, பிஜே ரோட்டரி கிளப்பின் தலைவர் எச்.எஸ்.தரன் வழங்கினார். நற்சான்றிதழ் பெற்ற உற்சாகத்தை வழங்கும்.

அதுமட்டுமின்றி, திரை மறைவில் அளப்பரிய பணிகளை புரியும் இவர்களை, பொதுமக்களின் பார்வைக்கு கொண்டு வந்து, பிறருக்கு முன்னுதாரணமாக இவர்கள் திகழ்வதற்காகவும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இன்று விருது பெற்ற அனைவரும், அவர்களது மேலாளர்கள் அவர்களிடம் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் கருத்துகளின் அடிப்படையில் விருது பெற தேர்வு செய்யப்பட்டனர்.

இத்தகைய விருதுகள் சமூக சேவையில் ஈடுபடுபவர் களுக்கு போற்றத்தக்க அங்கீகாரத் தையும் வழங்குகின்றன. தீவிர மிகவும் சிரமப்பட்டதாகவும், அதன் பின்னர் தாதியாக வேலைக்குச் சேர்ந்து தம் சொந்தச் செலவி லேயே இளங்கலைப் பட்டம் வரை படித்ததாகவும் குறிப்பிட்டார்.

தாதியர் தொழிலில் முழு ஈடுபாடு இருக்க வேண்டும். கனிவும் பரிவும் இத்தொழிலின் அடிப்படைச் சாராம்சங்கள். கடமைக்காக பணிபுரியாமல், மனமுவந்து நோயாளிக்கு நம் சேவையை வழங்க வேண்டும். பொறுமையாக ஒரு நோயாளியின் உடல், மனப் பிரச்சினைகளை செவிமடுக்க வேண்டும். இந்த குணநலன்களைக் கொண்டிருந் தால், தாதிமைத் துறையில் அதிகமான சாதனைகளைப் புரியலாம் என்று விருது பெற்ற



அனைத்து தாதியரும், சிறுநீரக சிகிச்சைப் (Dialisis) பிரிவில் சிறந்த சேவையை வழங்கியதற்காக கௌரவிக்கப்பட்டனர்.

பிஜே ரோட்டரி கிளப்பின் வருடாந்திர கௌரவிப்பு நிகழ்வான இந்த தொழில்முறை சேவைக்கான விருது, சிலாங்கூர் மாநிலத்தில் பல்வேறு துறைகளில் சிறந்த பங்களிப்பை வழங்கும் சேவையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. சமுதாயத்திற்கு தேவையான உதவிகளுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் சேவையாளர்களுக்கு, இது போன்ற விருதுகள் மேலும் சிறப்பாக அவர்கள் பணியாற்றுவதற்கான சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட ஆயிரத்திற்கும் மேலான நோயாளிகளுக்கு இவர்கள் கனிவான சேவையைப் புரிந்திருக்கிறார்கள். இவர்களை கௌரவப்படுத்துவதில் பிஜே ரோட்டரி கிளப் பெருமையடை கிறது என்று எச்.எஸ்.தரன் குறிப்பிட்டார்.

விருதுபெற்ற தாதிகளில் ஒருவரான எஸ்.சுமதி (வயது 31), கடந்த 7 ஆண்டு காலமாக கிள்ளான் செயிண்ட் ஜோன்ஸ் ஆம்புலன்ஸின் சிறுநீரக சிகிச்சைப் பிரிவில் பணியாற்றி வருவதாகக் கூறினார். 2003–ஆம் ஆண்டில் தாதிமைத் துறைக்கான கல்வியை மேற்கொள்ளும் போது அதன் செலவுகளை ஈடுகட்ட தாம் மகிழ்ச்சியில் சுமதி தெரிவித்தார்.

தேசிய சிறுநீரக அறவாரியத்தைச் சேர்ந்த சித்தி ஃபாத்திமா பசீர், ரோஸ்மா முகமட் சைட், செயிண்ட் ஜோன்ஸ் ஆம்புலன்ஸின் ஹஸ்லினா ஹெல்மி, எம்.ஏ.ஏ. மெடிகேரைச் சேர்ந்த சித்தி ஸமிடா முகமட் ஆகியோருக்கும் இந்த விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்வில், மலேசிய செயிண்ட் ஜோன்ஸ் ஆம்புலன்ஸின் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு தலைவர் சி.கே.சிங், டாக்டர் என்.கிருஷ் ணமூர்த்தி, பிஜே ரோட்டரி கிளப்பின் ஊடக ஒருங்கிணைப் பாளர் பிரிஸில்லா ஆல்ஃபிரெட் உட்பட ரோட்டரி கிளப் உறுப்பினர் களும் கலந்து கொண்டனர்.